# பகுதி – 2

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும். (சரியா ? தவறா ?)**

| | | |
|---|---|---|
| 1. | இராமானுஜர் அவதரித்த ஆண்டு கி.பி. 1137 | சரி / தவறு |
| 2. | இராமானுஜரின் தாயார் திருநாமம் பெயர் காந்திமதி | சரி / தவறு |
| 3. | கோவிந்தன் எனப்படும் எம்பாரின் தாயார் திருநாமம் பெரியபிராட்டி | சரி / தவறு |
| 4. | இராமானுஜர் ஹாரீத கோத்திரத்தில் அவதரித்தார் | சரி / தவறு |
| 5. | கைவிணி சரஸ் என்ற புஷ்கரிணி திருநறையூரில் அமைந்துள்ளது | சரி / தவறு |
| 6. | இராமானுஜருடைய சகோதரிகளில் விஜயாம்பாள் என்பவர் ஒருவர் | சரி / தவறு |
| 7. | இராமானுஜர் இளமையில் வேதசாஸ்த்திரங்களைப் தனது தந்தையிடம் பயின்றார். | சரி / தவறு |
| 8. | இராமானுஜருக்குத் திருமணம் நடந்தபோது அவருக்கு வயது 16 | சரி / தவறு |
| 9. | யாதவப்ரகாசர் இராமானுஜருக்கு வேதாந்தக் கல்வியை திருநின்றவூரில் போதித்தார். | சரி / தவறு |
| 10. | விந்தியமலைக் காடுகளிலிருந்து காஞ்சிக்கு திரும்பி இராமானுஜர் திருக்கச்சி நம்பியை ஆசார்யனாகப் பெற்றிட விரும்பினார். | சரி / தவறு |
| 11. | ஸ்ரீமந்நாதமுனிகளின் தந்தை தெய்வத்துக்கு அரசு | சரி / தவறு |
| 12. | வீரநாராயணபுரம் ஏரியில் அமைந்துள்ள மதகுகளின் எண்ணிக்கை 74 | சரி / தவறு |
| 13. | திருவாய்மொழியில் அமைந்துள்ள பாசுரங்களின் எண்ணிக்கை 1102 | சரி / தவறு |
| 14. | திருப்பாவையைப் பாடியவர் பெரியாழ்வார் | சரி / தவறு |
| 15. | திருப்பாவையில் அமைந்துள்ள பாசுரங்களின் எண்ணிக்கை 143 | சரி / தவறு |
| 16. | பெருமாள் திருமொழி என்னும் திவ்யபிரபந்தத்தை குலசேகர ஆழ்வார் அருளிச் செய்தார். | சரி / தவறு |
| 17. | திருமாலை என்னும் திவ்யபிரபந்தத்தை தொண்டரடிப்பொடி ஆழ்வார் அருளிச் செய்தார். | சரி / தவறு |
| 18. | கம்பர் இயற்றிய இராமாயணத்திற்கு திருவரங்கத்தில் அரங்கேற்றிட உதவி செய்த வைணவ ஆசார்யர் ஆளவந்தார் | சரி / தவறு |
| 19. | ஸ்ரீமந்நாதமுனிகளின் சிஷ்யர் உய்யக்கொண்டார் ஆவார். | சரி / தவறு |
| 20. | மணக்கால்நம்பிகள் யமுனைத்துறைவர்க்கு அளித்த கீரையின் பெயர் தூதுவளைக் கீரை | சரி / தவறு |
| 21. | யமுனைத் துறைவர் மகாபாஷ்யபட்டரிடம் வேதாந்தக் கல்வி பயின்று வந்தார் | சரி / தவறு |
| 22. | யமுனைத் துறைவர் என்ற ஆளவந்தாரின் மனைவி பெயர் கமலவல்லிநாச்சியார் | சரி / தவறு |
| 23. | ஸ்தாத்ர ரத்னம் என்னும் நூலை இயற்றியவர் நாதமுனிகள் | சரி / தவறு |
| 24. | ஆகம ப்ராமாண்யம் என்னும் நூலை இயற்றியவர் ஆளவந்தார் | சரி / தவறு |
| 25. | பெரியநம்பிகள் அவதரித்த ஆண்டு கி.பி. 997 | சரி / தவறு |
| 26. | திருக்கோட்டியூர் நம்பி அவதரித்தது வைகாசி ரோகிணி | சரி / தவறு |
| 27. | திருமாலையாண்டான் அவதரித்தது திருமாலிருஞ்சோலையில் | சரி / தவறு |
| 28. | திருக்கச்சிநம்பிகள் அவதரித்த திருநக்ஷத்திரம் ரேவதி | சரி / தவறு |
| 29. | வேதவ்யாஸருடைய வேதாந்த ஸூத்ரத்திற்கு அத்வைதபரமாக உரை எழுதியவர் இராமானுஜர் | சரி / தவறு |
| 30. | ஆளவந்தாரை இராமானுஜர் நேரில் தரிசிக்க முடிந்தது | சரி / தவறு |
| 31. | த்வயம் விளைந்த திருப்பதி என்று மதுராந்தக திருத்தலத்தை அழைக்கிறோம் | சரி / தவறு |

| | | |
|---|---|---|
| 32. | மகாபுருஷ நிர்ணயம் என்ற நூலை அருளிச் செய்தவர் மணக்கால்நம்பிகள் | சரி / தவறு |
| 33. | தாசரதி என்றார் கூரத்தாழ்வானைக் குறிக்கும். | சரி / தவறு |
| 34. | ஸ்ரீவத்ஸாங்க மிச்ரர் என்ற திருநாமம் கூரத்தாழ்வானைக் குறிக்கும். | சரி / தவறு |
| 35. | ''யதிதர்ம ஸமுச்சயம்'' என்ற நூலை எழுதியவர் கோவிந்த ஜீயர் | சரி / தவறு |
| 36. | இராமானுஜரை காஞ்சியிலிருந்து திருவரங்கத்திற்கு அழைத்து வரக் காரணமாய் இருந்தவர் திருவரங்கப் பெருமாள் அரையர் | சரி / தவறு |
| 37. | ''பொங்கோதம் சூழ்ந்த புவனியும், விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆழ்கின்ற எம்பெருமான் செங்கோலுடைய திருவரங்கச் செல்வராம் என்று புகழப்படுபவர்'' தேவப்பெருமான் | சரி / தவறு |
| 38. | விதுரருக்கு இறுதிச் சடங்குகளைச் செய்தது தருமன் | சரி / தவறு |
| 39. | பெரிய நம்பிகளை மற்ற அந்தணர்கள் ஒதுக்கியபோது தேரில் வந்த நம்பெருமாளிடம் நீதி கேட்டுத் தேரை நிறுத்தியவர் அத்துழாய் | சரி / தவறு |
| 40. | இராமானுஜரின் தண்டு (முக்கோல்) என்று அழைக்கப்படுபவர் நம்பிள்ளை | சரி / தவறு |
| 41. | இராமானுஜரிடம் இராமானுஜரிடம் ''கொள்ளிடத்தில் அமிழ்ந்து நீராடுகையில் நீருக்கு மேலே தெரியும் எங்கள் ஆசார்யரின் திருமுதுகே எனது தியானக் கருப்பொருள் ஆசார்யரின் திருநாமமே தியான மந்திரம்!'' என்றவர் மணக்கால் நம்பிகள் | சரி / தவறு |
| 42. | இராமானுஜருக்கு ஆசார்ய நிஷ்டை எனும் சரமோபாய நிஷ்டையும், தர்ம ரகஸ்யங்களும் அவற்றின் ஆழ்பொருள்களும் அருளியவர் திருவரங்கப் பெருமாளரையர் | சரி / தவறு |
| 43. | சுந்தரத் தோளுடையானின் திருத்தகப்பனார் திருமாலையாண்டான் | சரி / தவறு |
| 44. | சொட்டை நம்பியின் திருத்தகப்பனார் ஆளவந்தார் | சரி / தவறு |
| 45. | கந்தாடையாண்டானின் திருத்தகப்பனார் மணக்கால்நம்பி | சரி / தவறு |
| 46. | மல்லன் ''வில்லி''தாஸரின் ஊர் திருவெள்ளறை | சரி / தவறு |
| 47. | பிள்ளையுறங்காவில்லிதாஸரின் திருநக்ஷத்திரம் மாசி–ஆயில்யம் | சரி / தவறு |
| 48. | பிள்ளையுறங்காவில்லிதாஸரின் மருமக்கள் மூவர் | சரி / தவறு |
| 49. | பாம்பின் வாயில் அகப்பட்ட தவளையின் கூக்குரல் கேட்டு மயக்கம் அடைந்த பரம காருண்யர் கூரத்தாழ்வான் | சரி / தவறு |
| 50. | ததீயாராதனத்திற்காக வாழை மரத்தின் இலை அறுத்தபோது அது உகுத்த நீரைக்கண்டு அதற்கும் அதிகமாகக் கண்களில் நீர் பெருக்கியவர் கூரத்தாழ்வான் | சரி / தவறு |
| 51. | பாரம்பரியம் காரணமாகத் திருவரங்கம் திருக்கோயில் நிர்வாகியாக இருந்தவர் நம்பிள்ளை | சரி / தவறு |
| 52. | திருவரங்கத்தமுதனாரின் திருநட்சத்திரம் பங்குனி ஹஸ்தம் | சரி / தவறு |
| 53. | அமுதனாரின் தாயார் பரமபதித்தபோது அவரது இல்லத்திற்கு ஏகாஹம் என்னும் பதினொன்றாம் நாள் காரியத்திற்குச் சென்றவர் முதலியாண்டான் | சரி / தவறு |
| 54. | இராமானுஜர் ஆத்மாவுக்குப் பிரதான நிரூபகம் எது என்று அறிந்துவர திருக்கோட்டியூருக்கு மணக்கால்நம்பியை அனுப்பினார் | சரி / தவறு |
| 55. | வடுகநம்பியின் திருநக்ஷத்திரம் பங்குனி ஹஸ்தம் | சரி / தவறு |
| 56. | இராமானுஜர் தமது சீடர்களுடன் கொள்ளிடத்தில் நீராடி வரும்போது அதனைத் தமது ஆசார்யர் ஸ்ரீஆளவந்தார் சீடர்களுடன் வருவதாக எண்ணித் தமது சீடர் இராமானுஜரை விழுந்து சேவித்த இராமானுஜரின் ஆசார்யர் பெரியநம்பிகள் | சரி / தவறு |
| 57. | இராமானுஜர் திருவரங்கம் கோயில் பணிகளுக்கான நியமித்த கொத்துக்கள் இருபது | சரி / தவறு |
| 58. | ''தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தி வைத்தான் வாழியே!'' என்ற திருநாமம் பெற்றவர் ஆளவந்தார் | சரி / தவறு |
| 59. | கோவிந்தனுக்கு இராமானுஜர் இட்ட திருநாமம் எம்பார் | சரி / தவறு |
| 60. | ஒரு பாம்பின் நாவில் முள் தைத்து, அது அவதிப்படுவதைக் கண்டு, அதன் | சரி / தவறு |

வாய்க்குள் கையைவிட்டு அந்த முள்ளை எடுத்துவிட்ட ஜீவகாருண்யர் கோவிந்தன்

61. இராமானுஜர் திருமலையிலிருந்து திருவரங்கத்திற்கு விடைகொண்டபோது, பெரிய திருமலை நம்பிகள் அவருக்குப் பரிசாக நம்பிள்ளையை சீடராகத் தந்தார் சரி / தவறு
62. பஞ்சகாலப் பாராயணர் என அழைக்கப்பட்டவர் திருவனந்தாழ்வான் சரி / தவறு
63. பராசரர், வேதவ்யாஸ பட்டர்கள் எப்போது 1097 சரி / தவறு
64. பராசரர், வேதவ்யாஸ பட்டர் அவதரித்த தமிழ்வருடம் பிரபவ வருடம் சரி / தவறு
65. பஞ்சாசார்ய பதாசார்யர் இராமானுஜர் ஆவார். சரி / தவறு
66. இராமானுஜர் நம்பெருமாளின் திருமேனியைக் காக்கும் பொறுப்பிற்கு திருக்குருகைப்பிரான்பிள்ளான் என்பவரை நியமித்தார் சரி / தவறு
67. எதிகட்கிறைவன் ஸ்ரீஆளவந்தார் என்கிறார் அமுதனார். சரி / தவறு
68. ஸ்ரீமந்நாரமுனிகளை நெஞ்சால் வாரிப்பருகுபவர் இராமானுஜர் என்கிறார் அமுதனார். சரி / தவறு
69. பொன்னரங்கமெனில் மயலே பெருகுபவர் இராமானுஜர் என்கிறார் அமுதனார். சரி / தவறு
70. கலிமிக்க செந்நெல் கழனிக் குறையல் கலைப்பெருமான் ஒலிமிக்க பாடலை உண்டுதன் உள்ளம் தடித்து அதனால் வலிமிக்க சீயம் நம்பிள்ளை என்கிறார் அமுதனார். சரி / தவறு
71. இவ்வுலகத்தோர் முக்தியடைவதில் அதிக அக்கரையுள்ளவர் மணக்கால்நம்பி சரி / தவறு
72. இராமானுஜ நூற்றாந்தாதியை ஏகாதசி புறப்பாடு திருநாளில் நம்பெருமாள் திருச்செவு சாற்றுகின்றார். சரி / தவறு
73. நம்பெருமாளால் புத்திர ஸ்வீகாரம் செய்து கொள்ளப்பட்டவர் பராசரபட்டர் சரி / தவறு
74. குழந்தை பட்டருக்குக் கண்ணெச்சில் படாமலிருக்கக் கண்ணேறு கழித்து ஆண்டாளிடம் ஒப்படைத்தது பொன்னாச்சி சரி / தவறு
75. "நமது மதுரகவிகள்" என்று இராமானுஜர் சொல்லுமாறு வாழ்ந்த சீடர் வடுகநம்பி சரி / தவறு
76. வடுகநம்பி நம்பிள்ளை–நஞ்சீயர் ஆகியோரை "இருகரையர்" என்பார். சரி / தவறு
77. ஆசார்யன் அருகே இருக்கும்போது மிடுக்குடன் ஆசார்யன் திருநாமம் சொல்லாது எம்பெருமான் திருநாமம் சொல்லுவதைப் பாவம் என்றவர் வடுகநம்பி சரி / தவறு
78. இராமானுஜர் திருவாய்மொழிக்கு விரிவுரை எழுத நியமித்தவர் திருக்குருகைப்பிரான்பிள்ளான் சரி / தவறு
79. காஷ்மீரில் இராமானுஜர் அத்வைதிகளை வாதில் வென்று தமது பாஷ்யத்தை வால்மீகி ஆசிரமத்தில் அரங்கேற்றினார். சரி / தவறு
80. கலைமகள் உகந்து இராமானுஜருக்கு அளித்த திருநாமம் ஸ்ரீபாஷ்யகாரர் சரி / தவறு
81. அப்பனுக்கு ஆழி, சங்கு அளித்த அண்ணல் என்று ஆசார்யன் ஆனவர் இராமானுஜர் சரி / தவறு
82. திருமலையில் தோமாலை சேவை ஏற்படுத்தியவர் நஞ்சீயர் சரி / தவறு
83. திருமலையில் காலையில் திருப்பாவை சாற்றுமறை செய்ய நியமித்தவர் அனந்தாசார்யர் சரி / தவறு
84. திருமலையில் வசிப்பவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஆசாரங்களை வகுத்தவர் இராமானுஜர் சரி / தவறு
85. திருமலை ஸந்நிதிப் பிரகாரத்தில் உள்ள கிணற்றின் பெயர் அழகப்பிரானார் கிணறு சரி / தவறு
86. திருவேங்கடமுறையானின் திருமுகவாட்டத்தை இராமானுஜர் ஸ்ரீரங்கநாச்சியார் மாலையை அதிகமாக ஸமர்ப்பித்து தணித்தார். சரி / தவறு
87. திருவரங்கத்தில் ஒருநாள் நம்பெருமாளின் திருமுகம் தயிரன்னத்தோடு சரி / தவறு

நாவல்பழம் அமுது செய்வித்ததால் வாடியது

| | | |
|---|---|---|
| 88. | அந்தச் செயலுக்கு இராமானுஜர் வடுகநம்பியைக் கடிந்து கொண்டார் | சரி / தவறு |
| 89. | அடியார்கள் அமுது செய்யும்போது தீர்த்தம் பரிமாறுகையில் சற்றே சாய்ந்தபடி பரிமாறி, இராமானுஜரால் கண்டிக்கப்பட்டு, ‘‘பணிமானம் பிழையாமே அடியேனைப் பணிகொண்டீர்’’ என்று பணிந்த சீடர் கிடாம்பியாச்சான் | சரி / தவறு |
| 90. | இராமானுஜர் முதலியாண்டானுக்குச் சாத்தாத முதலிகள் பற்றி அருளிய வார்த்தைகள் பத்து | சரி / தவறு |
| 91. | வயதான காலத்தில் இராமானுஜர் கொள்ளிடத்தில் நீராடித் திரும்புகையில் பிள்ளையுறங்காவில்லிதாசர் தோள்மீது கையிட்டுத் திரும்பினார். | சரி / தவறு |
| 92. | திருமலை சென்ற திருவரங்கப் பெருமாளரையரிடம் திருவேங்கடமுடையான் முதலாழ்வார்கள் பாசுரங்களைத் திருச்செவி சாற்றியருள விரும்புவதாகக் கூறினான் | சரி / தவறு |
| 93. | இராமானுஜர் மடத்தில் இராமாயண காலக்ஷேபத்தில் விபீஷண சரணாகதியைப் பற்றி உருக்கமாகச் சொல்லிக் கொண்டு இருக்கும்போது இடையே வெளியில் செல்ல எழுந்தவல் பிள்ளையுறங்காவில்லிதாசர் | சரி / தவறு |
| 94. | சோழ அரசவைக்கு வந்தது இராமானுஜர் அல்ல என்பதை அரசன் எங்களாழ்வான் மூலம் அறிந்து கொண்டான் | சரி / தவறு |
| 95. | இராமானுஜரை விரோதியாகப் பார்த்த சாளக்கிராமத்தில் இருந்த ஜைனர்கள் முதலியாண்டான் திருவடிபட்ட குளத்துத் தீர்த்த சம்பந்தத்தால் திருந்தி அவருக்குச் சீடரானார்கள் | சரி / தவறு |
| 96. | இராமானுஜரும் குழுவினரும் சென்ற ஊர் கொடுமுடி | சரி / தவறு |
| 97. | போய்பிடித்திருந்த ஹொய்சாள அரசனின் மகளைக் குணமாக்கி அனுக்கிரகித்தால் வைணவ தரிசனத்திற்கு நன்மை விளையும் என இராமானுஜரிடம் தொண்டனூர் நம்பி விண்ணப்பித்தார். | சரி / தவறு |
| 98. | திருநாராயணபுரத்தில் திருக்கோயில் திருவாராதனம் மற்றும் நித்ய கைங்கர்யப் பணிகளுக்கு 52 வைணவர்களை இராமானுஜர் நியமித்தார் | சரி / தவறு |
| 99. | இராமானுஜர் தொண்டனூரில் செய்த சமுதாயப்பணி கால்வாய் அமைத்தது. | சரி / தவறு |
| 100. | பெரியநம்பிகள் பரமபதிக்கும்போது அவருக்குக் காட்சியளித்த பெருமாள் திருமலையப்பன் | சரி / தவறு |

# ***விடைகள்***

| | | | | |
|---|---|---|---|---|
| 1. தவறு | 2. சரி | 3. சரி | 4. சரி | 5. தவறு |
| 6. தவறு | 7. சரி | 8. சரி | 9. தவறு | 10. சரி |
| 11. தவறு | 12. சரி | 13. சரி | 14. தவறு | 15. தவறு |
| 16. சரி | 17. சரி | 18. தவறு | 19. சரி | 20. சரி |
| 21. சரி | 22. தவறு | 23. தவறு | 24. சரி | 25. சரி |
| 26. சரி | 27. சரி | 28. தவறு | 29. தவறு | 30. தவறு |
| 31. சரி | 32. தவறு | 33. தவறு | 34. சரி | 35. சரி |
| 36. சரி | 37. தவறு | 38. சரி | 39. சரி | 40. தவறு |
| 41. தவறு | 42. சரி | 43. சரி | 44. சரி | 45. தவறு |
| 46. சரி | 47. சரி | 48. தவறு | 49. சரி | 50. சரி |
| 51. சரி | 52. சரி | 53. தவறு | 54. தவறு | 55. தவறு |
| 56. சரி | 57. சரி | 58. தவறு | 59. சரி | 60. சரி |
| 61. தவறு | 62. தவறு | 63. தவறு | 64. சரி | 65. சரி |
| 66. தவறு | 67. சரி | 68. சரி | 69. சரி | 70. தவறு |
| 71. தவறு | 72. தவறு | 73. சரி | 74. சரி | 75. சரி |
| 76. தவறு | 77. சரி | 78. சரி | 79. தவறு | 80. சரி |
| 81. சரி | 82. தவறு | 83. தவறு | 84. சரி | 85. சரி |
| 86. தவறு | 87. சரி | 88. தவறு | 89. சரி | 90. சரி |
| 91. சரி | 92. சரி | 93. சரி | 94. தவறு | 95. சரி |
| 96. சரி | 97. சரி | 98. சரி | 99. தவறு | 100. தவறு |